

# பனித்துளி செய்திகள்!

“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)
துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**08.06.2020**

## 5. ‘நம் துக்கத்தில்’ இயேசுவை காண்பதே நம் சந்தோஷம்!’

“உங்கள் துக்கம்” சந்தோஷமாக மாறும்! என்றே இயேசு வாக்குரைத்தார்! (யோ.16:20). உலக மாந்தருக்கோ ‘லௌகீக சந்தோஷம்’ தவிர, துக்கத்தின் உயர் மதிப்பு தெரியாது! என, இதே வசனத்தில் இயேசு கூறினார். ‘தேவ மாந்தர்களாகிய’ நாமோ, துக்கத்தின் நடுவில் **‘இயேசுவை’ காண்கிறபடியால்,** நம் துக்கம்.... எதுவாயிருந்தாலும், நம் இருதயம் சந்தோஷமடைகிறது! இயேசு வோடு கொண்ட ஐக்கியத்தில் விளையும் ‘இந்த சந்தோஷத்தை’ எதுவும் எடுத்துப்போட முடியாது! என, இயேசு உறுதியளித்தார்! (யோவான் 16:22).

சிறைச்சாலையில் யோசேப்பு இருந்தார்.... கர்த்தரும் யோசேப்போடு இருந்தார்! என ‘சிறைச்சாலை’ மாறுவது சந்தோஷமன்றோ! (ஆதி.39:21,22). இயேசுவின் ஆத்துமா கலங்கிய வேளையில், பிதா தன் சமூகத்தை அருளி ‘மகிமைப்படுத்தினேன்’ என முழங்கியதல்லவோ நித்திய சந்தோஷம்! (யோவான் 12:27,28). அல்லேலூயா!

**– ரத்னம்**